தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
28441286 / 28440938 பேக்ஸ்: 28443601 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
மு.அன்பரசு
மாநில துணைத் தலைவர்கள்
மொ.ஞானத்தம்பி
ஏ.பெரியசாமி
இரா.மங்களபாண்டியன்
என்.வெங்கடேசன்
மு.சீனிவாசன்
கோ.பழனியம்மாள்

பொதுச் செயலாளர்
ஆ.செல்வம்
மாநிலச் செயலாளர்கள்
இரா.ந.நம்பிராஜன்
சி.எஸ்.கிறிஸ்டோபர்
சி.பரமேஸ்வரி
உ.சண்முகம்
தெ.வாசுகி

மாநிலப் பொருளாளர்
மு.பாஸ்கரன்

ஊடகச் செய்தி 8/2021 நாள்.25.07.2021

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு. அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ. செல்வம் ஆகியோர் இணைந்த வெளியிடும்

## ஊடகச் செய்தி

**இளைஞர்களுக்கு பணி கிடைக்கட்டும்.......**
**ஓய்வு பெறுவோருக்கு பலன் கிடைக்கட்டும்......**
**வருங்கால இளைஞர் சமுதாயம் வளமாகட்டும்......**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு இன்று 25.7.2021 சென்னை மாநில மையத்தில் மாநிலத்தலைவர் தோழர்.மு.அன்பரசு தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச்செயலாளர் தோழர்.ஆ.செல்வம் வேலை அறிக்கை தாக்கல் செய்தார். மாநில நிர்வாகிகள் அனைவரும் பங்கு பெற்றார்கள். மாநிலம் முழுவதிலுமிருந்து மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை முன்வைத்து பலகட்ட போராட்டங்களை தொடர்ந்து நடத்தியும் சங்க நிர்வாகிகளை அழைத்துப்பேச மறுத்த முந்தைய அதிமுக அரசினை நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் **"பகைமுடிக்கும் பணிமுடித்து"** ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தி உள்ளோம். சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் அனைத்தும் கழக அரசு வந்தவுடன் நிறைவேற்றப்படும் என வாக்குறுதி அளித்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர்.மு.க.ஸ்டாலின் ஆவார்.

மேலும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கடந்த 27.01.2021 அன்று மாநிலம் தழுவிய அளவில் மதுரையில் நடைபெற்ற போராட்ட ஆயத்த மாநாட்டிலும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி மூலம் **"கழக ஆட்சி வந்த உடன் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் முழுமையாக எற்கப்படும்"** என்றும், புதிய ஓய்வூதிய திட்டத்தினை இரத்து செய்து பழைய பயனளிப்பு ஓய்வூதிய திட்டம் மீண்டும்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கடந்த அதிமுக ஆட்சியின் போது போராடிய அரசு ஊழியர்களின் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் கைவிடப்படும் 17b குற்றக்குறிப்பாணைகள் ரத்து செய்யப்படும் என்றும் உறுதி அளித்தார்.

இதனை ஒட்டியே திமுக தேர்தல் அறிக்கையிலும் மேற்கண்ட உறுதிமொழிகளை உள்ளடக்கிய வாக்குறுதிகளோடு அரசு ஊழியர்களின் பணிதொடர்பான பிரச்சனைகளை தீர்த்துவைக்க மாநில நிர்வாகத்தீர்ப்பாயம் அமைக்கப்படும் என்றும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்படும் என்றும், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து காலமுறை ஊதியமும் குறைந்தபட்ச ஓய்வூதியமும் பணிக்கொடையும் வழங்கப்படும் என்றும், அரசு ஊழியர்களின் குடும்ப நல நிதி 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அரசு ஊழியர்களுக்கான புதிய காப்பீட்டு திட்டம் மேலும் பயனளிக்கும் வகையில் மாற்றியமைக்கப்படும் என்றும் வாக்குறுதிகளும் அளிக்கப்பட்டிருந்தது.

நாங்கள் எதிர்பார்த்தபடியே திமுக ஆட்சி அமைந்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக பரிசீலனை இதுவரை செய்யப்படவில்லை என்ற நிலையில் கடந்த ஒரு வார காலமாக அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது மீண்டும் 58ஆக குறைக்கப்படும் என்ற அறிவிப்பு பத்திரிக்கைகளில் வெளிவந்து கொண்டிருக்கிறது. பல்லயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்துக்கொண்டும், போட்டி தேர்வுகளுக்கு தயாராக உள்ள நிலையில் இளைய தலைமுறையினருக்கு சாதகமான அறிவிப்பு என்பதால் சமூக அக்கறை கொண்டு எங்களது சங்கம் வரவேற்கிறது.

கடந்த ஆட்சியின்போது அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 2020ஆம் ஆண்டு 58லிருந்து 59 ஆகவும் 2021ஆம் ஆண்டு 59லிருந்து 60ஆகவும் உயர்த்தி அரசாணைகள் வெளியிடப்பட்ட போது அதனை எங்கள் அமைப்பு சார்பில் கடுமையாக எதிர்த்து மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம்.

ஆனால், ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கான பணப்பலன்களை பத்திரங்களாக (Bond) வழங்க உள்ளதாகவும் பத்திரிக்கை செய்திகள் வந்து கொண்டுள்ளன. இதனை தமிழக அரசு மறுத்து இதுவரை செய்தி வெளியிடாதது ஓய்வுபெறும் நிலையில் உள்ள அரசு ஊழியர்களுக்கு மிகுந்த மன கலக்கத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தி உள்ளது. மேலும், ஓய்வு பெற்றபின் ஓய்வுகால வாழ்க்கையில் திட்டமிட்டுள்ள குழந்தைகளின் படிப்பு, திருமணம், கடன் நேர்செய்தல் போன்றவற்றை நிறைவேற்ற முடியாமல் பொருளாதார சிக்கலுக்கு தள்ளப்படுவார்கள் என்று அச்சமும் ஏற்படுகிறது. எனவே, தமிழக அரசு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு பணப்பலன்களை பணமாக வழங்க உத்தரவாதப்படுத்த வேண்டும் என்பதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

இன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழுவிலும் இதனை வலியுறுத்தி **"விடியல் வரும்"** என்ற கனவோடு காத்திருக்கும் அரசு ஊழியர்களின் பிரதான கோரிக்கைகளான "புதிய ஓய்வூதிய திட்டத்தினை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தினை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

நடைமுறைப்படுத்துதல், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து முறையான காலமுறை ஊதியம் வழங்குதல், சாலைப்பணியாளர்களின் 41 மாதகால பணிநீக்க காலத்தை பணிக்காலமாக வரன்முறைப்படுத்தி அதற்கான ஊதியம் வழங்குதல், ஓய்வுபெறும் வயதினை மீண்டும் 58ஆக மாற்றுதல், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு மீண்டும் வழங்குதல், குறைக்கப்பட்ட சேமநலநிதிக்கான வட்டி விகிதத்தை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்துதல், உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக தமிழக அரசு பரிசீலித்திட வேண்டும் என்று மாநில செயற்குழுவில் தீர்மானம் இயற்றியுள்ளோம்.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசு அலுவலகங்களில் உள்ள காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடவும் கடந்த அதிமுக அரசால் பறிக்கப்பட்ட, முடக்கப்பட்ட எங்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட மாண்புமிகு தமிழக முதலமைச்சரை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

(மு.அன்பரசு)
மாநிலத்தலைவா

(ஆ.செல்வம்)
பொதுச்செயலாளர்